10th August 1963]

ஆடுதுறையில் கலைக் கல்லூரி

*கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் மூன்றாண்டுகளுக்குள்ளாக திருப்பனந்தாள் மடாதிபதியின் உதவியால் தனியார் கலைக் கல்லூரி ஒன்று நிறுவ சென்றதடவை இருந்த அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் நிறுவப்பட்ட குழு தற்போது என்ன நிலையில் இருக்கிறது ?

(இ) அந்தக் கல்லூரியை நிறுவ முன்வந்த திருப்பனந்தாள் மடத்தினர் அதே நேரத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கலைக் கல்லூரியை நிறுவி ஆடுதுறையை விட்ட காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government have no information.

*Bus-stands and markets*

* 94 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether his surprise visits to the Municipal Bus-stand and daily market at Erode was an "On the spot survey" to carry out the recommendation of the Fact Finding Committee on Bus-stands and Markets headed by Mr. V. V. Ramaswamy Nadar, and

(*b*) whether a copy of the report of the Fact Finding Committee on bus-stands and markets under the chairmanship of Mr. V. V. Ramaswamy Nadar will be placed on the Table of the House?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) The surprise visit has no connection with the recommendations of the Fact Finding Committee headed by Sri V. V. Ramaswamy Nadar. It relates only to Madras City.

(*b*) A copy of the report[a] of the Fact Finding Committee is placed on the table of the House.

(அ) அந்த திடீர் விஜயத்திற்கும், உண்மை காணும் குழுவினரது சிபார்சுகளுக்கும் ஒரு விதத் தொடர்பும் இல்லை. அது சென்னை நகரத்தை மட்டும் பொறுத்தது.

(இ) உண்மை காணும் குழுவினரது அறிக்கையின் பிரதி ஒன்று சபையின் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் திரு. வி. வி. ராமசாமி நாடார் அவர்களைத் தலைவராகக் கொண்ட பஸ் ஸ்டாண்டு, மார்க்கெட் நிலவா அறிவிப்புக் குழுவின் அறிக்கையில் சில சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கை கொடுக்கப்பட்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. அந்த சிபார்சு

[a] Printed as Appendix III on pages 577–606 infra.

களில் உடனடியாக நிறைவேற்றப்படக் கூடிய சிபார்சுகள் என்னென்ன நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, 'லாங் டர்ம்' சிபார்சுகளைப் பொறுத்த வரையில் என்னென்ன ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கமிட்டியினுடைய சிபார்சுகள் சர்க்காருக்கு அதிகப் பணச் செலவு ஏற்படுத்தக்கூடிய அளவிலே உள்ளன என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகையால், இது சம்பந்தப்பட்டுள்ள முடிவு எடுப்பதற்காக நகராட்சி கமிஷனுருடைய அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது. அங்கிருந்து இன்னும் முடிவான தகவல் வரவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நகராட்சி மன்ற மேயர்கள், சர்க்கார் சுகாதார அதிகாரி ஆகிய எல்லோரையும் கலந்து கொண்டுதான் அறிக்கை தயாரித்தார்கள். அறிக்கையினுடைய சிபார்சுகளை நிறைவேற்ற அதிகப் பணச் செலவு ஆகும் என்பதனுல் இந்த அறிக்கையின் சிபார்சுகளை அமைச்சர் அவர்கள் மறுக்கிறுர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மறுக்கவில்லை. கார்ப்பரேஷன் கமிஷனரிடமிருந்து கிடைத்த பதிலின் மீது நன்ருகப் பரிசீலனை செய்து, அதன் பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும் என்றுதான் நான் சொல்கிறேன்.

### விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பில் பயிற்சி

* 95 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் . கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விளையாட்டுச் சாமான்கள் தயாரிக்க ஜப்பானிய நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) அப்படியானுல் , அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

(உ) பயிற்சி நிலையம் எந்த இடத்தில் அமைக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) உண்டு.

(இ) ரூபாய் 70,280.

(உ) சென்னை.

**திரு. கரு. சீமைச்சாமி :** என்ன என்ன விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது எப்படிச் சொல்ல முடியும் ? இங்கே ஜப்பானிய நிபுணர்கள் வந்து பயிற்சி அளிப்பார்கள். அப்படிப் பயிற்சி அளிக்கின்றவர்கள் பல